**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.84/2017**

நாள்: 12.08.2026.

பெயர்: திருமுருகன் (வா.சா.1) த/பெ: ரத்தினசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1) நானும் எனது தம்பி ராஜுவ் காந்தியும் தனித்தனியாக வசித்து வருகிறோமா என்றால் ஆமாம். எங்கள் இருவரின் சொத்துக்களை தனித்தனியே அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் அவரவர் வருமானத்தை வைத்து அவரவர் குடும்பத்தை தனித்தனியே பார்த்து வருகிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கை நான் குடும்ப மேனேஜராக தாக்கல் செய்துள்ள நிலையில் எனது தம்பி ராஜுவ் காந்தி இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து எங்கள் பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனக்கு சகோதரிகள் உள்ளனரா என்றால் உள்ளார்கள், மூன்று மூத்த சகோதரிகள் உள்ளனர். எனது தாய், தந்தை இருவருமே இறந்துவிட்டனர். நான் எனது சகோதரர், சகோதரிகள் ஆகியோருடன் பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. எங்கள் குடும்ப சொத்தில் எனக்கும், எனது சகோதரர், சகோதரிகள் அனைவருக்கும் பாகம் உள்ளதா என்றால் உள்ளது. எனது சகோதரர் மற்றும் சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2) எனது வழக்கில் UDR ல் பட்டா மாறியுள்ளதாக கூறியுள்ள நிலையில் மாவட்ட ஆட்சியரையோ, வட்டாட்சியரையோ இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 05.04.2017 ல் 6ம் பிரதிவாதியிடம் பதிவை நிறுத்திவைப்பதற்கு மனு கொடுத்ததற்கான ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 6ம் பிரதிவாதி சட்டப்படி உரிமை உள்ள ஆவணங்களை பதிவு கோருபவர் கொடுக்கும் போது, அதனை பதிவு செய்ய மறுக்க 6ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு எதிராக உத்தரவிட்டால், உத்தரவைப் பொறுத்து 6ம் பிரதிவாதி பத்திரங்கள் பதிய மாட்டார் என்றால் சரிதான். எனது மனுவை 6ம்

பிரதிவாதி பதிவு சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் நிராகரித்துள்ளார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியை அவசியமில்லாமல் தரப்பினராக சேர்த்ததால் 6ம் பிரதிவாதியைப் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ர.திருமுருகன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.